கிறது. இதிலே முதலமைச்சரும், அமைச்சர்களும் சற்று கவனம் செலுத்தி இந்த நிலைமை வராமல் தடுப்பதற்கும், போதை மாத்திரை விற்பவர்களுக்கு கடுமையான தண்டனையும் கொடுப் போமானால் அது மிக சிறந்ததாக இருக்கும். பள்ளி மாணவர் களும், கல்லூரி மாணவர்களும் பாதுகாப்பாக இருப்பார்கள், எனவே போலீஸ் துறையில் அதிகம் பேர்களை செலக்ஷன் செய்து எடுக்க வேண்டும். போலீஸ் போதாது. பந்தோபஸ்துக்கு 4, 5 பேர் இருக்கிறார்கள். 6 போலீஸ் இருக்கிறார்கள், பத்து போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே ஓடுகிறார் கள், கடைசியில் ஸ்டேஷனில் ஆள் இருப்பதில்லை, அந்த நிலைமை இல்லாமல் இருக்க அதிகப்படியான ஆட்களை போலீஸ் பணிக்குத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முழுமையாக இந்த போலீஸ் துறை மானியத்தை ஆதரித்து. நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நன்றியையும். வணக்கத்தை யும் பேரவைத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் அம்மா அவர் களுக்கும் தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

பிற்பகல் 2—10

6, அரசினர் தீர்மானம்.

விதி 32ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

" சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 18—3—1992 அன்று தளர்த்தி அந்த நேரம் அரசின் அலுவல்களுக்காக எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க,

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

1992 மார்ச் 17] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-3-1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

20. கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93 (தமிழ், ஆங்கிலம்).

21. கோரிக்கை எண் 16—தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கைக் குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

22. கோரிக்கை எண் 15—தமிழ்நாடு காவல் துறையின் சாதனைகள் மற்றும் வருங்காலத் திட்டங்கள் பற்றிய குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS